இணைப்பு II.

(305 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத 8 —வினா எண் 7070க்கான விடையைக் காண்க.)

(அ) மற்றும் (ஆ) —

வட ஆற்காடு மாவட்டம், செய்யார் வட்டம், அசனமாப் பேட்டையிலிருக்கும் அருள்மிகு இராமநாத ஈஸ்வரசுவாமி ஆலயத்தில் 12—6—1980 அன்று நடு இரவில் பிரதோஷ விநாயகர், அம்மன் மற்றும் மாணிக்கவாசகர் ஆகிய மூன்று சிலைகள் களவாடப்பட்டுள்ளன. மேற்கண்ட களவு பற்றி 13-6—1980 அன்று காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டதன் தொடர்பாக, புலனாய்வு விசாரணை குற்ற எண். 113/80-ன் படி ஆரணி துணைகாவல் ஆய்வாளர் குழு பம்பாய் சென்று 7—3—1981 அன்று பம்பாய் காவல் துறையின் உதவியுடன் ராமனிக்லால்பட் என்பவரிடமிருந்து மேற்கண்ட மூன்று சிலைகளும் மீட்கப்பட்டன. இதன் தொடர்பாக முருகன், கணேசன், துரைசாமி, வீரகண்ணன் ஆகிய நான்கு பேர்களை 13—3—1981 அன்று காஞ்சீபுரத்தில் கைது செய்து 23—4—1981 அன்று மோரணம் காவல் நிலைய ஆய்வாளரால் செய்யார் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் நீதி மன்றத்தில் வழக்கு எண் 334/81-ல் தாக்கல் செய்து, வழக்கு விசாரணை செய்யப்பட்டு குற்றம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபணமாகவில்லை என்று முடிவு செய்து குற்றவாளிகள் 18—8—1982 அன்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

(இ) —

(1) பழம்பெரும் பொருட்கள் மற்றும் கலைப் பொருட்கள் குறித்த 1972 ஆம் வருடத்திய தொல் பொருள் பதிவு சட்டத்தின்படி, ஆலயங்களிலுள்ள தொன்மையான விக்கிரகங்கள் மற்றும் சிலைகள் பதிவு செய்யப்படுகின்றன.

(2) விக்கிரகங்களை நிழற்படம் எடுத்து ஆல்பம் தயார் செய்து ஒவ்வொரு ஆலயத்திலும் உள்ள விக்கிரகங்கள் ஒரு தனி பதிவேட்டில் பதிவு செய்யப்படுகின்றன.

(3) போதிய பாதுகாப்பு வசதியற்ற ஆலயங்களிலுள்ள விக்கிரகங்கள் அருகில் உள்ள பெரிய ஆலயங்களில் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன.

(4) சிலைகள் உள்ள இடங்களுக்குப் போதுமான காவல் நியமனம் செய்யப்படுகின்றது. பாதுகாப்புப் பதிவேடு பேணப்பட்டு, அதில் காவலர்கள் தினப்படி பணி மாற்றம் ஆகும்போது பூட்டப்பட்டுள்ள பூட்டுக்கள் போதுமான பாதுகாப்பு இல்லாமலிருப்பின் கூடுதல் பூட்டுக்கள் பூட்டப்படுகின்றன.

(5) ஒவ்வொரு சன்னதிக்கும் கதவு அல்லது கதவுக்கு மேல் இரும்புக் கம்பியாலான கதவுகள் போடப்பட்டு வருகின்றன.

1984 மார்ச் 6]

(6) சிலைகள் பாதுகாப்பாக வைக்கும் இடத்தைப் பாதுகாக்கவும், மேற்படி இடத்திற்கு அவசியமான பந்தோபஸ்து செய்யவும், அந்தந்த ஆலயங்களின் வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அரசு மானியமும் வழங்கப்பட்டுள்ளது.

(7) ஆலயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பட்டாச்சாரியார்கள் அல்லது குருக்கள் அல்லது பண்டாரங்கள் இருப்பின் தினப்படி அல்லது ஆலயத்திற்குத் தகுந்தவாறு பணி மாற்றம் செய்யும்போது பணி மாற்றப் பதிவேட்டில் (Turn R gister) கையொப்பம் பெறப்படுகிறது. ஒரே ஒரு பட்டாச்சாரியார் அல்லது குருக்கள் அல்லது பண்டாரம் இருந்து சன்னதிகள் பலவாக இருந்தால் ஒரு சன்னதியிலிருந்து மற்றொரு சன்னதிக்கு செல்லும் போது முந்தைய சன்னதி பாதுகாப்புக்காகப் பூட்டிச் செல்லப் படுகிறது. மேற் சொன்னவர்கள் இல்லாத சமயம் எந்தச் சன்னதியும் திறந்து வைக்கப்படுவதில்லை.

(8) ஆலயங்களின் உள்ளேயும் வெளியேயும் சுற்றிவர காவலர்கள் வைக்கப்பட்டு, டெல்டேல் கடிகாரங்களும் வைத்துக் கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

(9) சந்தேகத்திற்கிடமான வகையில் நடமாடும் நபர்களைக் கவனித்து காவல் துறையினருக்குத் தகவல் கொடுக்கவும் அவசியமானால் லைசென்ஸ் பெற்ற துப்பாக்கி வாங்கிக்கொடுத்து பயிற்சி அளிக்கவும், ஆணையரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. கூடிய வரையில் கூர்க்காவையே நியமனம் செய்யப்பட இருக்கிறது.

(10) களவு நடந்த உடனே காவல் துறைக்கும், ஆணையருக்கும் தெரிவிக்கப்பட்டு அரசுக்கும் அறிக்கை அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(11) ஆலயச் சிப்பந்திகளின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க வேண்டுமென்றும், ஏதாகிலும் ஒரு சிப்பந்திகளின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டால் தீவிரமாகக் கண்காணித்து அவர் மீது காவல் துறையில் ஏதாவது புகார்கள் உள்ளதா என விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தேவையானால் காவலர்களின் புகைப்படம் எடுத்து காவலரின் விவரங்களுடன் வைத்துக் கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

(12) விக்கிரகங்கள் பாதுகாப்பாக இருப்பதனை காவல் துறையினர் அடிக்கடி கண்காணிக்க காவல் நிலையத்திலிருந்து பட்டாப் புத்தகம் பெற்று அதில் ரோந்து வரும் காவலர்களின் கையொப்பம் பெறப்படுகிறது.

(13) சிலைத் திருட்டு நேர்வுகள் கடுமையான குற்றங்களாகக் கருதப்பட்டு ஒவ்வொரு நேர்வும் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள் மாதந்தோறும் குற்ற வழக்குகளின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்களின்போது சிலைத் திருட்டுகளில் புலன் விசாரணையின் முன்னேற்றத்தையும் ஆய்வு செய்கின்றனர். உள்ளூர் காவல்துறை சிலைத் திருட்டு வழக்கு

களில் புலன் விசாரணை செய்வதில் சிரமப்பட்டால் அவ்வழக்குகள் காவல் துறையின் குற்றவியல் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

(14) காவல் துறையின் இரவு நேரத்துக் காவலர், மதிப்புமிக்க சிலைகளுள்ள கோயிலுக்கு அடிக்கடி சென்று கோவிலில் அல்லது அதற்கு அருகில் வைக்கப்பட்டிருக்கும் பதிவேட்டில், கையொப்பமிடுகின்றனர். உள்ளூர் காவல்துறை அலுவலர்களும் இவ்விதக் கோவில்களுக்கு அடிக்கடி சென்று கண்காணித்து வருகின்றனர்.

(15) சிலை திருடர்கள் பற்றியும், திருடப்பட்ட சிலைகளை வாங்குபவர்கள் பற்றியும் சம்பந்தப்பட்ட காவல் அலுவலகத்தில் பட்டியல்கள் பேணப்பட்டு சிலை திருடுவோர்களைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும் சிலைகள் திருடும் குற்றவாளிகளின் கைவிரல் ரேகைகளைப் பதிவு செய்ய வேண்டும் என்றும் அவற்றினை முக்கியமாக காவல்துறை ரேகைப் பதிவு அலுவலகங்களில் வைத்திருக்க வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

(16) காவல்துறை சார்நிலை அலுவலர்கள் கோவில்களை அடிக்கடி கண்காணிப்பதுடன் காவல்துறை கண்காணிப்பாளர்களும் அவர்களுடைய அதிகார வரம்பிற்குட்பட்ட மதிப்பு வாய்ந்த சிலைகள் வைக்கப்பட்டிருக்கும் கோயில்களுக்கும், மற்ற இடங்களுக்கும் சென்று பார்வையிடுகின்றனர்.

(17) தென் மாநிலங்களில் நடைபெறும் கற்சிலை மற்றும் வெண்கலச் சிலைகள் திருட்டு பற்றியும் அவைகளைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் அவ்வப்போது கால முறையில் நடைபெறும் தென் மாநிலங்களின் காவல் துறைத் துணைத் தலைவர்களின் கூட்டத்தின்போது விவாதிக்கப்பட்டு மாநிலங்களிடையே நடைபெறும் சிலைக் கடத்தலைத் தடுப்பதற்குத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(18) சிலை திருட்டு வழக்குகளை நடத்துவதற்காக தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் ஒரு கூடுதல் நீதித்துறை தலைமை நடுவர் கொண்ட தனி நீதிமன்றம் (Additional Chi f Judicial Magistrat) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நீதிமன்றத்திற்கு உதவி செய்ய இரண்டாம் நிலை அரசுக் குற்றத் துறை வழக்கறிஞர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

(19) சென்னையில் சிலை திருட்டு வழக்குகளைப் புலன் விசாரிப்பதற்காக காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவர் இரண்டு ஆய்வாளர்கள் மற்றும் சில பணியாளர்கள் கொண்ட காவல்துறை தனிப்பகுதி ஒன்று இயங்கி வருகிறது.

மேலும் எடுக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் தலைமை செயலகத்தில் வணிகவரி அறநிலையத்துறை அரசுச் செயலாளர், காவல்துறை அதிகாரிகள், இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர், தொல் பொருள் துறைத் தலைவர், சுங்க இலாகா அதிகாரிகள் ஆகியோருடன் கால முறையில் ஆய்வு செய்யப்படுகின்றன.